[2016 ஜனவரி 23

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், 356 கோடி ரூபாய் வாரி வழங்கி, வருவாய்த் துறைக்குத் தேவையான 377 கட்டடங்களை உருவாக்கித் தந்து, வருவாய்த் துறைக்குப் புத்துயிர் அளித்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 44 மற்றும் 45 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.*

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதெல்லாம் ஒன்றும் இல்லை. அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, எதுவும் கிடையாது. (குறுக்கீடு) அதெல்லாம் அனுமதி எதுவும் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு)*